IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.

PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா.15 { Prosecution PW.15
{ Defence
{ Court

1. Name : திரு. கிருஷ்ணமூர்த்தி

2. Father Name :

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, ஓய்வு பெற்று பி.49, தென்றல் நகர், திருவாரூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 29.11.2016 ஆம் தேதி குடவாசல் காவல்நிலையத்தில் உதவி

ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது, திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து முரளி, த/பெ. குஞ்சுப்பிள்ளை என்பவர் காயமுற்று சிகிச்சையிலிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்றேன்.உடனடியாக மேற்படி மருததுவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த முரளி என்பவரை விசாரணை செய்து புகார்வாக்குமூலம் பதிவு செய்தேன்.மேற்படி புகார் வாககுமூலம் அடிப்படையில் குடவாசல் காவல்நிலையக் குற்ற எண்436/2016 இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 452, 506(2), 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.முதல் தகவல் அறிக்கையையும், புகார்வாக்குமூலத்தையும் இணைத்துதிருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக குடவாசல் காவல்நிலைய ஆய்வாளர் திரு.செல்வம் அவர்களிடம் ஒப்படைத்தேன். தற்போது காட்டப்படும் புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் நான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார்வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.1ன் மூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.21. ஆய்வாளர் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தில் இருவேறு இடங்களில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். முதல்தகவல்

அறிக்கையில் சம்பவமானது காலை 9 மணிக்கு நடைப்பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் சம்பவத்தில் பெயரிடப்பட்ட 7 நபர்கள் மட்டுமே ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்கு மேற்பட்ட நபர்களோ அல்லது குறைந்த நபர்களோ சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கலையரசிக்கும், தமிழ்வாணன் என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததது சம்பந்தமாக, சென்ற மாதம் கடைசியில் ஏற்பட்ட தகராறில் முரளி மீதும் அவரது அப்பா குஞ்சுப்பிள்ளை, அண்ணன் முத்துகிருஷ்ணன், அண்ணி ஜெயா மீது குடவாசல் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக என்னிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 29.11.2016 ஆம் தேதி புகார்தாரர் முரளி வீட்டிடம், அவரது அப்பா, அம்மாவை காலை 8 மணியளவில் எதிரிகள் தாக்கியதுபோல, ஏதாவது சம்பவம் நடந்ததாக என்னிடம் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் முரளி சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. புகார்வாக்குமூலத்திலும், அதனடிப்படையிலும் நான் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கையிலும் சொல்லியுள்ளதுபோல இவ்வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், முரளியும், அவரது அப்பா மற்றும் அண்ணனும் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது சாலையின் குறுக்கே திடீரென இவ்வழக்கின் சாட்சி பசுபதி என்பவர் வந்தபோது, அவர் மீது மோதி கீழே விழுந்ததில்தான், முரளி, அவரது அப்பா

குஞ்சுப்பிள்ளை மற்றும் முரளியின் அண்ணன் முத்துகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்றபோது பசுபதி, மாரியம்மாள், முரளி, குஞ்சுப்பிள்ளை, முத்துகிருஷ்ணன், ஜெயா ஆகியோருடைய விபத்து பதிவேட்டு ஆவணங்களை பெற்றேனா என்றால் பெற்றேன். அதில் பசுபதியுடைய விபத்து பதிவேட்டு ஆவணத்தில் அவர் சாலையின் குறுக்கே கடந்த போது இருச்சக்கர வாகனம் மோதி அவருக்கு காயம் ஏற்பட்டதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால், நான் முதல் தகவல் அறிக்கையில் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், விபத்தில் முரளி, அவரது அப்பா மற்றும் அண்ணன் ஆகியோர்களுக்கு ஏற்பட்டகாயத்தை பயன்படுத்திக்கொண்டு ஏற்கனவே அவர்களுக்கு எதிராக, தமிழ்வாணன் வகையறா கொடுத்த புகாரின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால், எதிரிகள் தாக்கி காயப்படுத்தியதுபோல, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையே முரளி வகையறாவிற்கு ஆதரவாக, என்னால் ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:53:05 +0530